**சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம், சேலம்**

**முன்னிலை–திரு. இரா.வேலரஸ், B.Sc.,B.L., L.L.M.,**
**அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ.)**
**சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம், சேலம்**

**2025–ஆம் வருடம் மார்ச் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை.**

**SC No.338/2016**

(CNR No. TNSA250002562024 )

[ முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண் 23/2015 – குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்]

[ஓமலூர் காவல் நிலைய குற்ற எண்.232/2015]

| | | |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் துணை கண்காணிப்பாளர்,<br>ஓமலூர் உட்கோட்டம்,<br>ஓமலூர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.232/2015 |
| 2. | எதிரிகளின் பெயர் மற்றும் விவரங்கள் | 1.ஆனந்தன் (எ) வெங்கடாஜலம் (30/2025)<br>த/பெ. சேகர்<br>நாலுக்கால் பாலம்,<br>சக்கரைச்செட்டிப்பட்டி,<br>சேலம் மாவட்டம்.<br>2. கார்த்திக் (30/2025)<br>த/பெ குமார்<br>நாலுக்கால் பாலம்,<br>சக்கரைச்செட்டிப்பட்டி,<br>சேலம் மாவட்டம்.<br>3. சரவணன் (34/2025)<br>த/பெ ராமு<br>நாலுக்கால் பாலம், |



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:24:43 +0530

| | | |
|---|---|---|
| | | சக்கரைச்செட்டிப்பட்டி,<br>சேலம் மாவட்டம்.<br>4. ராஜா (47/2025)<br>த/பெ. நாராயணன்<br>நாலுக்கால் பாலம்,<br>சக்கரைச்செட்டிப்பட்டி,<br>சேலம் மாவட்டம்.<br>5. விஜி (எ) விஜயகுமார் **(இறந்துவிட்டார்)**<br>த/பெ கோவிந்தன்<br>நாலுக்கால் பாலம்,<br>சக்கரைச்செட்டிப்பட்டி,<br>சேலம் மாவட்டம்.<br>6.பாலமுருகன் (31/2025)<br>த/பெ வெங்கடேஷ்<br>நாலுக்கால் பாலம்,<br>சக்கரைச்செட்டிப்பட்டி,<br>சேலம் மாவட்டம். |
| 3. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | பிரிவுகள் 147, 294(b), 323(6 counts), 323 r/w 149 of IPC, பிரிவு 3(1)(x) of SC/ST Act. |
| 4. | எதிரியின் கோரிக்கை | குற்றவாளி இல்லை. |
| 5. | நீதிமன்ற முடிவு | பிரிவுகள் 147, 294(b), 323(6 counts), 323 r/w 149 of IPC, பிரிவு 3(1)(x) of SC/ST Act ன் கீழ் குற்றவாளி இல்லை. |
| 6. | தீர்ப்புரை | முடிவாக, 5ம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்று போய்விட்டது என்றும், மற்ற எதிரிகளின் மீது பிரிவுகள் 147, 294(b), 323(6 counts), 323 r/w 149 of IPC, பிரிவு 3(1)(x) of SC/ST Act படிக்கு அரசு |

| | | |
|---|---|---|
| | | தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை BNSS.258(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளால் எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கும், பிணை பத்திரத்தை ரத்து செய்யவும், உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சி.பி.எண் 133/2015-ல் ஒப்படைக்கப்பட்டுள்ள வழக்கு சொத்து அ.த.சா.பொ.1 PVC பைப்புகள் 3 எண்ணிக்கை-ஐ மேல்முறையீட்டு காலம் முடிந்த பிறகு அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு என் முன்பாக 24.03.2025-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.எஸ்.இசையமுதன், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களைக் கேட்டும், அரசு தரப்பில் முன்னிடப்பட்ட ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:24:57 +0530

இன்று வரை என் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மணிவண்ணன் மற்றும் சாட்சிகள் உதயகுமார், அறிவழகன், வேல்முருகன் மற்றும் அஜித்குமார் ஆகியோர்கள் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் இயற்கை உபாதைகழிப்பதற்காக ரயில்ரோடு அருகே சென்றபோது இந்து வன்னியர் ஜாதியை சேர்ந்த எதிரிகள் அங்கு வரக்கூடாது என்று தடை செய்துள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக 28.03.2015 அன்று காலை 08.25 மணியளவில் தங்கராஜ் டீ கடைக்கு முன்பாக நிகழ்நிலை புகார்தாரர் மணிவண்ணனும், சாட்சிகள் உதயகுமார், அறிவழகன்,வேல்முருகன் மற்றும் அஜித்குமார் ஆகியோர்கள் பனியாரம் சாப்பிட்டு கொண்டு நின்று கொண்டிருந்தபோது இவ்வழக்கு 1 முதல் 6 எதிரிகள் சட்டவிரோத கூட்டமாகஒன்று கூடி பொதுவான நோக்கத்தில் நிறைவேற்றும்பொருட்டு மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் சாட்சிகளிடம் தன்னிச்சையாக மதுபோதையில் புகார்தாரர் மற்றும் சாட்சிகளை பார்த்து பற தேவடியா பசங்களா என்று அவர்களின் ஜாதி



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:25:04 +0530

பெயரை சொல்லி அசிங்கமாக திட்டி, தகராறு செய்து அவர்களை பிளாஸ்டிக் பைப்பால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்கள். இதனை தடுக்க வந்த சாட்சி ஈஸ்வரியையும் தாக்கி கீழே தள்ளி அவர்களுக்கு காயங்களை ஏற்படுத்தியுள்ள காரணத்தினால், மேற்படி எதிரிகள் பிரிவுகள் u/s. 147, 294(b), 323 r/w 149 of IPC, பிரிவு 3(1)(x) of SC/ST Act படிக்கு குற்றம் புரிந்துள்ளதாக ஓமலூர் உட்கோட்டம், காவல் துணை கண்காணிப்பாளர் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கையானது நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூரில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு மேற்படி வழக்காவணங்களை பரிசீலனை செய்த கற்றறிந்த ஓமலூர் நீதித்துறை நடுவர் அவர்கள் எதிரிகளின் மீது சுமத்தப்படும் குற்றங்கள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்க கூடியது என்று முடிவு செய்து இவ்வழக்கை முதல் நிலை பதிவேட்டு எண் 23/2015 ஆக கோப்பிற்கு எடுத்துள்ளார். குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் ஓமலூர், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச பிரிவு 207 ன் படிக்கு இலவசமாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்னர், மேற்படி



R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2025.03.27 17:25:10 +0530

எதிரிகளை நீத்துறை நடுவர் வினவி எதிரிகளின் பதிலை பதிவு செய்து கொண்டு இவ்வழக்கை கு.வி.மு.ச பிரிவு 209(a) ன் படிக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றியமைத்து உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன் படி மேற்படி வழக்கு கோப்பானது சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் SC 338/2016 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டதால் எதிரிகள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். அரசு தரப்பில் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.08 முதல் அ.சா.11 சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் வன்கொடுமை தடுப்பு சட்டப்படி பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு இந்த சிறப்பு நீதிமன்றம் துவங்கப்பட்ட காரணத்தினால், மேற்படி வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு SC 338/2016 என அதே எண்ணில் தொடர்ந்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 28 வரையும், அரசு தரப்பு சான்று பொருள் 1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எழும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கமாவது:

(I) **அ.சா.1 மணிவண்ணன்** தனது சாட்சியத்தில் தான் சக்கரைசெட்டிப்பட்டி, புதுக்கடையில் குடியிருந்து வருவதாகவும், தான் பெயிண்ட் வேலை செய்து வருவதாகவும், தான் ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர் என்றும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், சுமார் 5 வருடத்திற்கு முன்னர் தான் புதுக்கடை அருகே தனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது எதிரில் வந்த லாரி இடது புறமாக வந்தபோது தான் நிலை தடுமாறி மண்ணில் விழுந்துவிட்டதாகவும், பிறகு தான் ஓமலுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், அப்போது போலீசார் வந்து தன்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து கேட்டதாகவும், தான் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.1** என்றும், சாட்சியம் அளித்து அரசு தரப்பை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார்.

(II). **அ.சா.2. உதயகுமார்** தனது சாட்சியத்தில் தான் புதுக்கடையில் குடியிருந்து வருவதாகவும், தான் டேடா என்ட்ரி வேலை செய்த வருவதாகவும்,



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:25:26 +0530

புகார்தாரர் தனக்கு நண்பர் என்றும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியம் அளித்து அரசு தரப்பை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார்.

(III). **அ.சா.3 அறிவழகன்** தனது சாட்சியத்தில் தான் புதுக்கடை காலனியில் குடியிருந்து வருவதாகவும், தான் பெயிண்டிங் வேலை செய்து வருவதாகவும், புகார்தாரர் தனக்கு உறவினர் என்றும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் தானும், தனது நண்பர்களும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்ததாகவும், எதிரே லாரி வந்ததால் நிலைதடுமாறி கீழே விழுந்ததாகவும், ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், போலீசார் வந்து தன்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து கேட்டதாகவும், தான் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும், வேறு யாரும் அதில் கையெழுத்து செய்யவில்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள அறிவேன் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.2** என்றும், சாட்சியம் அளித்து அரசு தரப்பை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார்.

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2025.03.27 17:25:34 +0530

(IV). **அ.சா.4 வேல்முருகன்** தனது சாட்சியத்தில் தான் நாலுகால் பாளையத்தில் குடியிருந்து வருவதாகவும், தான் டிரைவராக வேலை செய்து வருவதாகவும், புகார்தாரர் தனக்கு பழக்கமில்லை என்றும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், சுமார் 5,6 வருடத்திற்கு முன்னர் தானும், தனது நண்பர் அறிவழகனும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது எதிரில் லாரி வந்ததால் இருவரும் நிலைதடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், அதனால் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், போலீசார் தங்களை விசாரித்ததாகவும், தன்னிடம் வெள்ளை தாளில் கையெழுத்து கேட்டதாகவும், தான் கையெழுத்து செய்ததாகவும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், சாட்சியம் அளித்து அரசு தரப்பை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார்.

**(V). அ.சா.5. அஜித்குமார்** தனது சாட்சியத்தில் தான் சக்கரைசெட்டிப்பட்டி, ஓமலூரில் குடியிருந்து வருவதாகவும், தான் லாரி டிரைவராக வேலை செய்து வருவதாகவும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்ததாகவும், சுமார் 5 வருடங்களுக்கு முன்னர்


R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:25:41 +0530

சக்கரைசெட்டிப்பட்டியில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தானும், தன் அம்மா ஈஸ்வரியும் தவறி கீழே விழுந்து தங்கள் இருவருக்கும் அடிபட்டதாகவும், ஓமலூர் அரசு மருத்துவமனையில் தாங்கள் அட்மிட்டானதாகவும், அங்கு ஓமலூர் போலீசார் விசாரித்ததாகவும், தாங்கள் கீழே தவறி விழுந்துவிட்டதாக சொன்னதாகவும், சாட்சியம் அளித்து அரசு தரப்பை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார்.

(VI). **அ.சா.6. ஈஸ்வரி** தனது சாட்சியத்தில் தான் சக்கரைசெட்டிப்பட்டியில் குடியிருந்து வருவதாகவும், தான் கூலி வேலைக்கு செல்வதாகவும், சாட்சி அஜித்குமார் தன்னுடைய மகன் என்றும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும், சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்னர் வண்டியில் சென்று தானும், தன் மகனும் கீழே விழுந்துவிட்டதாகவும், ஓமலூர் மருத்துவமனையில் போலீசார் தங்களை விசாரித்ததாகவும், வெள்ளை பேப்பரில் தன்னிடம் கையொப்பம் வாங்கியதாகவும் சாட்சியம் அளித்து அரசு தரப்பை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார்.

(VII). **அ.சா.7. தங்கராஜ்** தனது சாட்சியத்தில் தான் சக்கரசெட்டிப்பட்டி கிராமம், புதுக்கடை பஸ் ஸ்டாப் அருகில் டீ கடை வைத்திருப்பதாகவும்,

சாட்சிகள் ஈஸ்வரி, அஜித்குமார் ஆகியோரை தெரியும் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் உள்ளூர்க்காரர்கள் என்றும், வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்னர் தன் கடையில் வைத்து, வந்து சென்றதற்கு அத்தாட்சியாக போலீசார் கையெழுத்து கேட்டதாகவும், தான் 2 கையெழுத்துக்கள் செய்து கொடுத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், பார்வை மகஜரில் உள்ள தன்னுடைய கையெழுத்து **அ.த.சா.ஆ.3** என்றும், கைப்பற்றுதல் மகஜரிலுள்ள தன்னுடைய கையெழுத்து **அ.த.சா.ஆ.4** என்றும், சாட்சியம் அளித்து அரசு தரப்பை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார்.

(VIII). **அ.சா.8. பாலாஜி** தனது சாட்சியத்தில் தான் தற்போது சேலம் மாவட்டம் ஆலய நிலங்கள் தனி வட்டாட்சியாராக பணியில் இருந்து வருவதாகவும், தான் இதற்கு முன்பு 30.03.2015 அன்று ஓமலூர் மண்டல துணை வட்டாட்சியராக பணியில் இருந்தபோது ஓமலூர் காவல் நிலைய குற்ற எண் 232/2015 வழக்கு சம்மந்தமாக ஓமலூர் காவல் துணை கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோளின்படி 1 முதல் 4 மற்றும் 6 ஆகியோருக்கு சக்கரைசெட்டிப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:25:55 +0530

ஆகியோரின் அறிக்கையின் அடிப்படையில் அவர்கள் வன்னியர் பிரிவை சேர்ந்தவர்கள் என்று தான் ஜாதிச்சான்றிதழ் வழங்கியதாகவும், அவை முறையே **அ.த.சா.ஆ.5 முதல் அ.த.சா.ஆ.9** என்றும், போலீசார் என்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(IX). **அ.சா.9. டாக்டர் பெருமாள்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஓமலூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியில் இருந்து வருவதாகவும், கடந்த 29.03.2015 அன்று மேற்படி மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது காலை 04.00 மணியளவில் அ.சா.6 ஐ ஒரு சின்னபொன்னு என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும், அ.சா.6 தன்னை 20 தெரிந்த நபர்கள் 28.03.2015 அன்று இரவு 10.00 மணியளவில் சக்கரைசெட்டிப்பட்டியில் தடி மற்றும் இரும்பு கம்பியால் தாக்கியதாக தன்னிடம் சொன்னதாகவும், அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அவருக்கு வெளிபுற காயங்கள் எதுவும் இல்லை என்றும், நெஞ்சு வலிப்பதாக சொன்னதாகவும், அவருக்கு தான் முதலுதவி அளித்துவிட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பிவைத்ததாகவும், அ.சா.6க்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து தெரிவித்து தான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ.10 என்றும்,** மேற்படி நேரம், மேற்படி இடத்தில், மேற்படி சம்பவத்தில் காயமடைந்ததாக அதிகாலை 04.10 மணியளவில் அ.சா.4ஐ சதிஸ் என்பவர்



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:26:03 +0530

சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும், அ.சா.4 தன்னிடம் தன்னை அடையாளம் தெரிந்த 20 நபர்கள் மேற்படி நேரம், மேற்படி இடத்தில், மேற்படி சம்பவத்தில் கண்ணாடி பாட்டிலால் புதுக்கடை காலனி என்ற பகுதியில் தாக்கியதாக சொன்னார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன என்றும், அவை 1) 6x0.3 அளவிலான சிராய்ப்பு காயம்நீள்வாக்கில் வலது முன் மார்பு பகுதியில் இருந்தது என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்துசிசிக்சை அளித்ததாகவும், 30.03.2015 அன்று அவர் மருத்துவ அறிவுரையை மீறி வெளியில் சென்று காயத்தின் தன்மை குறித்து கருத்து தெரிவிக்க இயலவில்லை என்றும், அ.சா.4க்கு தான் வழக்கிய விபத்து பதிவேடு நகல் **அ.சா.ஆ11** என்றும், 29.03.2015 அன்று அதிகாலை 04.20 மணியளவில் அ.சா.1 ஐ சின்னபொன்னு என்பவர் மேற்படி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும், மேற்படி நேரம், மேற்படி இடத்தில், மேற்படி சம்பவத்தில் தன்னை அடையாளம் தெரிந்த 20 நபர்கள் 28.03.2015 அன்று இரவு 10.00 மணியளவில் புதுக்கடை காலனியில் வைத்து பாட்டில், பிளேடு மற்றும் தடி ஆகியவற்றால் தாக்கியதாக அ.சா.1 சொன்னதாகவும், தான் அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன்இருந்ததாகவும், அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருநதன என்றும், 1). 2x0.3 செமீ அளவுள்ள சிராய்ப்பு காயம் வலது மேல்கையில் காணப்பட்டது என்றும், 2).அவர் இடது முழங்காலில் வலி இருப்பதாக



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:26:09 +0530

கூறியதாகவும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், பின்னிட்டு அ.சா.1 மேல் சிகிச்சைக்கா சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டதாகவும், மேற்படி காயங்கள் சாதாரணமானவை என்று கருத்து தெரிவித்து தான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் **அ.சா.ஆ.12 என்றும்,** அவருக்கு வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.12 வின் பின்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அந்த குறிப்பு **அ.சா.ஆ.13 என்றும்,** அ.சா.6 க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகலின் பின்புறம் உள்ள காயச்சான்றுக்கான குறிப்பு **அ.சா.ஆ.14 என்றும்,** 29.03.2015 அன்று அதிகாலை 04.30 மணியளவில் அ.சா.5ஐ குமார் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும், அ.சா.5 தன்னை 28.03.2015 அன்று இரவு 10.00 மணியளவில் தெரிந்த 20 நபர்கள் இரும்பு கம்பியால் புதுக்கடை பகுதியில் தாக்கியதாக சொன்னதாகவும், தான் அ.சா.5 பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன என்றும், 1). 3 x 0.2 செமீ அளவுள்ள சிராய்ப்பு காயம் இடது முன்கையில் இருந்ததாகவும், அவரை தான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், அ.சா.5 30.03.2015 அன்று மருத்துவ அறிவுரையை மீறி மருத்துவமனையை விட்டு சென்றுவிட்டதனால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க முடியவில்லை என்றும், அ.சா.5க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் **அ.சா.ஆ.15**. 29.03.2015 அன்று



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:26:17 +0530

அதிகாலை 04.35 மணியளவில் அ.சா.2 ஐ வேலுமணி என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துவந்ததாகவும், அ.சா.2 தன்னை 28.03.2015 அன்று இரவு 10.00 மணியளவில் புதுக்கடை பகுதியில் 20 தெரிந்த நபர்கள் காலால் தாக்கியதாக தன்னிடம் சொன்னதாகவும், தான் அவரை பரிசோதிதத போது அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன என்றும், அவை 1). 20x1செமீ அளவுள்ள நீள்வாக்கில் ஒரு சிராய்ப்பு காயம் பின்பக்க இடது முதுகு பகுதியில் ஆரம்பித்து இடுப்பு பகுதி வரை காணப்பட்டது என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்ததாகவும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து தெரிவித்து தான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் **அ.சா.ஆ.16 என்றும்,** அதன் பின்புறம் காயத்தின் தன்மை குறித்த கருத்துரை **அ.சா.ஆ.17 என்றும்,** 29.03.2015 அன்று அதிகாலை 04.45 மணியளவில் அ.சா.3 ஐ ரத்தினம் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துவந்ததாகவும், அ.சா.3 தன்னை 28.03.2015 அன்று இரவு 10.00 மணியளவில் புதுக்கடை பகுதியில் 20 தெரிந்த நபர்கள் கட்டையால் தாக்கியதாக தன்னிடம் சொன்னதாகவும், தான் அவரை பரிசோதித்த போது அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன என்றும், அவருக்கு வெளிபுற காயங்கள் இல்லை என்றும், அவருக்கு 1x 1செமீ அளவுள்ள கன்றிய காயம் இடது புருவத்தில்



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:26:23 +0530

காணப்பட்டதாகவும், அவர் வலது தோள்பட்டையில் வலி இருப்பதாக சொன்னதாகவும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், அவர் 30.03.2015 அன்று மருத்துவ அறிவுரையை மீறி சென்றுவிட்டதால் அவருக்கு காயத்தின் தன்மை குறித்து சான்றிதழ் அளிக்க இயலவில்லை என்றும், அவருக்கு தான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் **அ.சா.ஆ.18 என்றும்,** மேற்படி காயங்கள் கம்பி போன்ற ஆயுதங்களால் தாக்கும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

(X). **அ.சா.10. நர்மதா** தனது சாட்சியத்தில் தான் தற்போது தர்மபுரி மாவட்டத்தில் கலால் உதவி ஆணையராக பணி புரிந்து வருவதாகவும், கடந்த 2015ம் வருடம் ஓமலூர் வட்டாட்சியராக பணியில் இருந்தபோது ஓமலூர் காவல் நிலைய குற்ற எண் 232/2015 SC/ST வழக்கில் சம்மந்தப்பட்ட மணிவண்ணன் த/பெ பெருமாள் என்பவருக்கு ஜாதி சான்றிதழ் கேட்டு ஓமலூர் காவல் துணை கண்காணிப்பாளரிடமிருந்து வேண்டுகோள் கடிதம் வந்ததாகவும், அதன் படி தான் சக்கரைசெட்டிப்பட்டி கிராம நிர்வாக அதிகாரி மற்றும் கருப்பூர் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று மேற்படி மணிவண்ணன் இந்து ஆதிதிராவிடர் ஜாதியை சேர்ந்தவர் என்று ஜாதி சான்றிதழ் வழங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஜாதி சான்றிதழ் தன்னால் வழங்கப்பட்டதுதான் என்றும்,


R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:26:29 +0530

அது **அ.த.சா.ஆ.19 என்றும்,** இது சம்மந்தமாக மேற்படி துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(XI). **அ.சா.11. சாந்தி** தனது சாட்சியத்தில் தான் திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் துணை ஆட்சியராக பணி புரிந்து 2020ம் ஆண்டு ஓய்வு பெற்றுவிட்டதாகவும், கடந்த 2015ம் வருடம் ஓமலூர் வட்டாட்சியராக பணியில் இருந்தபோது ஓமலூர் காவல் நிலைய குற்ற எண் 232/2015 SC/ST வழக்கில் காயம்பட்டதாக சொல்லும் உதயகுமார் த/பெ குட்டியப்பன், அறிவழகன் த/பெ ஏழுமலை, வேல்முருகன் த/பெ மாரியப்பன், அஜித்குமார் த/பெ பழனி, ஈஸ்வரி க/பெ பழனி ஆகியோர்களுக்கு ஜாதி சான்றிதழ்கள் கேட்டு ஓமலூர் காவல் துணை கண்காணிப்பாளரிடமிருந்து வேண்டுகோள் கடிதம் வந்ததாகவும், அதன் படி தான் சக்கரைசெட்டிப்பட்டி கிராம நிர்வாக அதிகாரி மற்றும் கருப்பூர் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று மேற்படி நபர்கள் இந்து ஆதிதிராவிடர் ஜாதியை சேர்ந்தவர்கள் என்று தனித்தனியே ஜாதி சான்றிதழ்கள் 08.07.2015ல் வழங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஜாதி சான்றிதழ்கள் தன்னால் வழங்கப்பட்டதுதான் என்றும், அவை **அ.த.சா.ஆ.20 வரிசை என்றும்,** இது சம்மந்தமாக மேற்படி துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(XII). **அ.சா.12. மனோன்மணி** தனது சாட்சியத்தில் தான் தற்போது சூரமங்கலம் காவல் நிலையத்தில் குற்றபிரிவில் காவல் ஆய்வாளராக



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:26:37 +0530

பணியாற்றி வருவதாகவும், கடந்த 29.03.2015ம் தேதி காலை 7.00 மணிக்கு ஓமலூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக அன்றைய தினம் நிலைய பொறுப்பில் இருந்த போது ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று தான் மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சக்கரைசெட்டிபட்டி கிராம, புதுக்கடை காலனியை சேர்ந்த மணிவண்ணன் த/பெ பெருமாள் என்பவரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் நிலையம் ஆஜராகி ஓமலூர் காவல் நிலைய குற்ற எண் 232/2015ல் சட்டபிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(ii) of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST Act 2004ன் படி வழக்கு பதிவு செய்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் மணிவண்ணன் சொல்ல சொல்ல தன்னால் பதிவு செய்யப்பட்டதாகவும், அது **அ.த.சா.ஆ 21 என்றும்,** முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ 22 என்றும்,** மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும்புகார் வாக்குமூலத்தின் அசலை ஓமலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகலைகளை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், மற்ற ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஓமலூர் காவல் துணை கண்காணிப்பாளருக்கும் அனுப்பி

வைத்ததாகவும், இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(XIII). **அ.சா.13. உதயகுமார்** தனது சாட்சியத்தில் தான் தமிழ்நாடு காவல் துறையில் திருநெல்வேலி கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி 2019ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றதாகவும், கடந்த 2015ம் ஆண்டு தான் ஓமலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றிய போது சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல் முறை ஆணை எண் C No. 15/SJ&HR/Proceedings/2015, dated 29.03.2015ன் படி இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டதாகவும், மேற்படி செயல் முறை ஆணை **அ.த.சா.ஆ 23 என்றும்,** அன்று காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் தங்கராஜ் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ 24 என்றும்,** மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ 25 என்றும்,** அன்று காலை 11.30 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்த சுமார் 4 அடி நீளம் மற்றும் 3.5 செ.மீ அளவுள்ள மூன்று PVC பைப்புகளை சம்பவ இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில்

கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ 26 என்றும்,** இன்று நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள மூன்று PVC பைப்புகள் தான் அன்றைய தினம் தன்னால் கைப்பற்றப்பட்டது என்றும், மேற்படி PVC பைப்புகள் 3 எண்ணிக்கை **அ.த.சா.பொ 1 வரிசை என்றும்,** பின்னர் ஒமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட வாதி மணிவண்ணன், மற்றும் சாட்சிகள் உதயகுமார், அறிவழகன், வேல்முருகன், அஜித்குமார் மற்றும் ஈஸ்வரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் மகஜர் சாட்சிகள் தங்கராஜ் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், விசாரணையில் முதல் தகவல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆனைகுட்டி என்பவர் சம்பவ இடத்தில் இல்லை என்பதை உறுதி செய்து பின்னர் அவரை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து அது தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி பெயர் நீக்கல் அறிக்கை **அ.த.சா.ஆ 27 என்றும்,** 30.03.2015 அன்று மாலை 3.30 மணிக்கு இவ்வழக்கில் கண்ட எதிரிகள் வெங்கடாஜலம் (எ) ஆனந்தம், பாலமுருகன், விஜி (எ) விஜயகுமார், சரவணன் மற்றும் ராஜா ஆகிய

நால்வரையும் நாலுகால் பாலம் பஸ் நிறுத்தம் அருகில் தகவலாளிகள் அடையாளம் காட்ட கைது செய்வதற்கான காரணங்களை விளக்கி கூறி கைது செய்ததாகவும், பின்னர் அன்று மாலை 4.00 மணிக்கு எதிரிகள் சகிதம் ஓமலூர் காவல் நிலையம் வந்து எதிரிகளை திரேக சோதனை செய்து காவலில் வைத்ததாகவும், பின்னர் உரிய வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், படிவம் 91 **அ.த.சா.ஆ 28 என்றும்,** பின்னர் இவ்வழக்கில் கண்ட வாதி மணிவண்ணன் மற்றும் சாட்சிகள் உதயகுமார், அறிவழகன், வேல்முருகன், அஜித்குமார் மற்றும் ஈஸ்வரி ஆகியோர்களுக்கும், எதிரிகள் வெங்கடாஜலம் (எ) ஆனந்தம், பாலமுருகன், விஜி (எ) விஜயகுமார், சரவணன், ராஜா மற்றும் கார்த்திக் ஆகியோர்களுக்கும் சாதி சான்றிதழ் வழங்க கோரி ஓமலூர் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும், பின்னர் 27.04.2015 அன்று வருவாய் துறை அதிகாரியிடம் இருந்து சாதி சான்றிதழ் கிடைக்க பெற்றதன் பேரில் ஓமலூர் வட்டாட்சியர் திருமதி. நர்மதா மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் திரு. பாலாஜி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும்,

அன்றைய தினமே காயம்பட்ட வாதி மற்றும் சாட்சிகளுக்கு காயச்சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றதன் பேரில் ஓமலூர் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் திரு. பெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே ஓமலூர் காவல் உதவி ஆய்வாளர் திருமதி. மனோன்மணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 28.05.2015 அன்று இவ்வழக்கில் குறிப்பிட்ட காலத்தில் புலன் விசாரணை முடிக்க இயலாத காரணத்தினால் கால அவகாச நீட்டிப்பு வழங்க கோரி ஓமலூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு கடிதம் கொடுத்ததாகவும், மேற்படி கடிதத்தின் பேரில் உத்தரவு பிறப்பித்த ஓமலூர் நீதித்துறை நடுவர் அவர்கள் கால அவகாசம் வழங்க கோரும் கடிதத்தை விசாரணை நீதிமன்றத்திடம் வழங்க கோரி அறிவுறுத்தியதன் பேரில் 02.06.2015 சேலம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கால அவகாசம் கோரி கடிதம் கொடுத்ததாகவும், பின்னர் சாட்சிகளுக்கு வருவாய் வட்டாட்சியர் அவர்கள் சாதி சான்றிதழ்கள் வழங்கியதன் பேரில் 08.07.2015 அன்று ஓமலூர் வட்டாட்சியர் திருமதி. சாந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே இவ்வழக்கில் தான் புலன் விசாரணை முடித்து அரசு

வழக்குரைஞரின் மாதிரி இறுதி அறிக்கை பெற்று எதிரிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் மீது சட்டபிரிவுகள் 147, 294(b), 323 r/w 149 of IPC r/w Sec 3(1)(x) of SC/ST (PoA) Act 1989ன் படி தண்டிக்கப்படகூடிய குற்றம் புரிந்துள்ளதாக இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், தான் விசாரித்த சாட்சிகள் தன்னிடம் என்ன சங்கதிகளை சொன்னார்களோ அந்த சங்கதிகளைதான் தான் வாக்குமூலங்களாக பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. அ.சா.1 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகளுடன் அரசு தரப்பு சாட்சியத்தை அரசு தரப்பு சிறப்பு வழக்கறிஞர் முடித்துக்கொண்டார்.

6. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளில் அ.சா.1 முதல் அ.சா.7 ஆகியோர்களின் சாட்சியங்களைத் தவிர மற்ற அ.சா.8 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ) ன் படி எதிரியிடம் எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சியம் மற்றும் பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் சாட்சிகள் உண்டு என்றும் தெரிவித்தார்கள். பின்னர், தனது

தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறி முடித்துக்கொண்டார்கள். இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன.

7. இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது புலன் விசாரணை அதிகாரி இறுதியறிக்கை தாக்கல் செய்தபோது, மேற்படி எதிரிகள் u/s. 147, 294(b), 323 r/w 149 of IPC, பிரிவு 3(1)(x) of SC/ST Act– ன் படிக்கு தண்டிக்கப்படக்கூடிய குற்றம் புரிந்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி வழக்கு அதே பிரிவுகளை குறிப்பிட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர், இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனைந்தபோது வழக்காவணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீது u/s. 147, 294(b), 323(6 counts), 323 r/w 149 of IPC, பிரிவு 3(1)(x) of SC/ST Act– ன் படிக்கு வனையப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகள் மீது u/s. 147, 294(b), 323(6 counts), 323 r/w 149 of IPC, பிரிவு 3(1)(x) of SC/ST Act–ன் படிக்கு சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் / வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் தக்க சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை காண்பதே ஆகும்.

**8.தீர்வு**

இந்த குற்ற வழக்கானது, கடந்த 29.03.2015 அன்று ஓமலூர்அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மணிவண்ணன் த/பெ பெருமாள் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஓமலூர் காவல் நிலைய குற்ற எண் 232/2015ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு துவங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான மணிவண்ணன் தனது புகார் வாக்குமூலத்தில் வழக்கமாக நாலுக்கால் பாலம் ரயில் ரோடு அருகில் தானும், தன்னை சேர்ந்தவர்களும், வெளிக்காட்டுப்பக்கம் போவது வழக்கம், நாலுக்கால் பாலத்தை சேர்ந்த சரவணன், ராஜா, ஆனந்த், கார்த்தி ஆகியோர்கள் தங்களை அங்கு வரக்கூடாது என்று தெரிவித்ததாகவும், இந்நிலையில் 28.03.2015 அன்று இரவு 10.00 மணியளவில் தானும், தங்கள் ஊரைச் சேர்ந்த தனது நண்பர்களான அஜித்குமார், அறிவழகன், வேல்முருகன், உதயகுமார் ஆகியோர்களும் தங்கராஜ் என்பவரது டீ கடை முன்பு இருந்தபோது இவ்வழக்கு எதிரிகளும், ஒரு ஆனைக்குட்டி என்பவரும் குடிபோதையில் அங்கு வந்து வேண்டுமென்றே பற தேவடியா பசங்களா என்று கெட்ட

வார்த்தைகளால் திட்டி, வம்புக்கு இழுத்தார்கள் என்றும், அப்போது நிகழ்நிலை புகார்தாரரும், அவரை சேர்ந்தவர்களும் நாங்கள் உங்கள் பகுதிக்கு வரமாட்டோம், நீங்கள் எங்கள் பகுதிக்கு வரக்கூடாது என்று சொன்னதற்கு எதிரிகளும் ஆனைக்குட்டி என்பவரும் நாங்கள் அப்படித்தாண்டா வருவோம் என்றும், உங்களால் என்ன செய்ய முடியும் என்று கேட்டு உங்களை இங்கேயே அடிக்கிறோம் என்று சொல்லி ஆனந்த் தன்னை நெஞ்சில் கையால் குத்தியதாகவும், சரவணன் கீழே கிடந்த பிளாஸ்டிக் பைப்பால் தனது வலது மேற்கையில் அடித்ததாகவும், அதனால் தனக்கு ரத்த காயங்கள் ஏற்பட்டது என்றும்,இதனை தடுக்க வந்த தனது நண்பர்களான வேல்முருகன், உதயக்குமார், அஜித்குமார், அறிவழகன் ஆகியோர்களையும் மேற்படி நபர்கள் ஆளுக்கொரு பிளாஸ்டிக் பைப்பை எடுத்து அடித்ததில் வேல்முருகனுக்கு வலது பக்க நெஞ்சிலும், உதயகுமாருக்கு வலது பக்க முதுகிலும், அஜித்குமாருக்கு இடது பின் முழங்கையிலும், அறிவழகனுக்கு இடது கண்ணுக்கு அருகிலும் காயம் ஏற்பட்டது என்றும், இதனை தடுக்க வந்த அஜித்தின் அம்மாவையும் மேற்படி நபர்கள் கீழே தள்ளியதால்அவருக்கும் உடம்பில் காயங்கள் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். 5ம் எதிரி கடந்த

04.12.2019 அன்று இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய்விட்டது.

9. மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் அவரது புகாரில் தெரிவித்துள்ள சங்கதிகளை பார்க்கும்போது அவரது நண்பர்களான உதயகுமார், அறிவழகன், வேல்முருகன், அஜித்குமார் மற்றும் அஜித்குமாரின் தாயார் ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக காணப்படுகிறது. மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் மணிவண்ணனும், அவரால் நேரடி சாட்சிகள் என்று சொல்லப்பட்ட நபர்களும் இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டபோதிலும் அவர்கள் அரசு தரப்பினை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்டார்கள். அதன் காரணமாக புகார் வாக்குமூலத்தில் உள்ள மணிவண்ணன் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1 ஆகவும்,அதில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்த அறிவழகனின் கையொப்பம் மட்டும். அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்படும்குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு போதுமானதாக இல்லை.



R VELARAS

Digitally signed by R VELARAS
Date: 2025.03.27 17:27:40 +0530

10. மேற்படி புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து வந்த அப்போதைய ஓமலூர் காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கில் அ.சா.12 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 29.03.2015 அன்று தான் மேற்படி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற இன்டிமேசன் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சக்கரைசெட்டிப்பட்டி கிராமத்தை சேர்ந்த மணிவண்ணன் த/பெ பெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அதன் அடிப்படையில் அ.த.சா.ஆ.22 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி மணிவண்ணன் புகார் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், அ.சா.12 உதவி ஆய்வாளர் மூலமாக மேற்படி புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கு SC/ST Act ன் படிக்கும் பதிவு செய்யப்பட்ட காரணத்தினால், அப்போதைய ஓமலூர் காவல் துணை கண்காணிப்பாளர் உதயகுமார் இவ்வழக்கில் அ.சா.13ஆக விசாரிக்கப்பட்டதில் அவர் தனது சாட்சியத்தில் சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணையான அ.த.சா.ஆ.23ன் படிக்கு இவ்வழக்கை புலன் விசாரணைக்கு

எடுத்து கொண்டதாக தெரிவித்துள்ளார். மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிறகு 29.03.2015 அன்றே காலை 11.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று அ.த.சா.ஆ.24 பார்வை மகஜரையும், அ.த.சா.ஆ.25 மாதிரி வரைபடத்தையும் சாட்சிகள் தங்கராஜ் மற்றும் வெங்கடேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அதே சாட்சிகள் முன்னிலையில் அ.த.சா.ஆ.26 கைப்பற்றுதல் மகஜரில் சா.பொ.1 வரிசையான 3 PVC பைப்புகளை கைப்பற்றியதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், இவ்வழக்கில் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்ட தங்கராஜ் அரசு தரப்பினை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார். எனவே, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பார்வை மகஜரில் உள்ள அவரது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3 ஆகவும், கைப்பற்றுதல்மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. இவ்வழக்கில் அ.சா.10ஆக விசாரிக்கப்பட்ட அப்போதைய ஓமலூர் வட்டாட்சியர் தனது சாட்சியத்தில் நிகழ்நிலை புகார்தாரர் மணிவண்ணன் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்று அ.த.சா.ஆ.19 ஜாதி சான்றிதழை சக்கரை செட்டிப்பட்டி கிராம நிர்வாக அதிகாரி மற்றும்

கருப்பூர் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கையின் படி ஓமலூர் காவல் துணை கண்காணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அதே போன்று அ.சா.11 ஆக விசாரிக்கப்பட்ட அப்போதைய ஓமலூர் வட்டாட்சியர் சாந்தி தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் காயம்பட்டதாக சொல்லும் உதயகுமார், அறிவழகன், வேல்முருகன், அஜித்குமார், ஈஸ்வரி ஆகியோர்கள் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்று அ.த.சா.ஆ.20 வரிசை ஜாதி சான்றிதழ்களை சக்கரைசெட்டிப்பட்டி கிராம நிர்வாக அதிகாரி மற்றும் கருப்பூர் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கையின் படி ஓமலூர் காவல் துணை கண்காணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அதே போன்று அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட அப்போதைய ஓமலூர் மண்டல துணை வட்டாட்சியர் பாலாஜி தனது சாட்சியத்தில் இவ்வழக்கு 1 முதல் 4 மற்றும் 6ம் எதிரிகள் வன்னியர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்று அ.த.சா.ஆ.5 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான ஜாதி சான்றிதழ்களை சக்கரை செட்டிப்பட்டி கிராம நிர்வாக அதிகாரி மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கையின் படி ஓமலூர் காவல்



R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:27:59 +0530

துணை கண்காணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி இருதரப்பினரின் ஜாதிகளை பொருத்து எவ்விதமான மாற்றுக்கருத்துமில்லை. எனவே, மேற்படி வருவாய் வட்டாட்சியர்களின் சாட்சியம் ஏற்புடையதாக உள்ளது.

14. இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லும் நிகழ்நிலை புகார்தாரர் மணிவண்ணன் சாட்சிகள் உதயகுமார், அறிவழகன், அஜித்குமார், வேல்முருகன், ஈஸ்வரி ஆகியோர்கள் தங்களை 28.03.2015 அன்று இரவு 10.00 மணியளவில் 20 தெரிந்த நபர்கள் கையாலும், கட்டையாலும், இரும்பு கம்பியாலும், பாட்டில், பிளேடு, தடி ஆகியவற்றாலும் தாக்கி காயப்படுத்தியதாக தன்னிடம் தெரிவித்தார்கள் என்றும், அவர்களை பரிசோரித்தபோது அனைவரும் சுயநினைவுடன் இருந்தார்கள் என்றும், அதில் அ.சா.6 ஈஸ்வரிக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து தெரிவித்து தான் வழங்கிய விபத்த பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.10 என்றும், அ.சா.4 வேல்முருகனுக்கு 6x0.3cm அளவிலான சிராய்ப்பு காயம் நீள்வாக்கில் வலது முன் மார்பு பகுதியில் இருந்தது என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், 30.03.2015 அன்று அவர் மருத்துவ அறிவுரையை மீறி வெளியில் சென்று காயத்தின்

தன்மை குறித்து கருத்து தெரிவிக்க இயலவில்லை என்றும், அ.சா.4க்கு தான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் அ.த.சா.ஆ.11 என்றும், அ.சா.1 மணிவண்ணனுக்கு 2x0.3cm அளவுள்ள சிராய்ப்பு காயம் வலது மேல் கையில் காணப்பட்டது என்றும், அவர் இடது முழங்காலில் வலி இருப்பதாக கூறியதாகவும், உள்நோயாளியாக சிகிச்சை அளித்து, பின்னிட்டு அ.சா.1 மேல் சிகிச்சைக்காக சேலம் மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டதாகவும், மேற்படி காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து தெரிவித்து தான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் அ.த.சா.ஆ.12 என்றும், அவருக்கு வழங்கப்பட்ட காயச்சான்று அ.த.சா.ஆ.12ன் பின்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அந்த குறிப்பு அ.த.சா.ஆ.13 என்றும், அ.சா.6ஈஸ்வரிக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகலின் பின்புறம் உள்ள காயச்சான்றுக்கான குறிப்பு அ.த.சா.ஆ.14 என்றும், அ.சா.5 அஜித்குமாரை பரிசோதித்து அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், அ.சா.5 30.03.2015 அன்று மருத்துவ அறிவுரையை மீறி மருத்துவமனையை விட்டு சென்றுவிட்டதனால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க முடியவில்லை என்றும், அ.சா.5 அஜித்குமாருக்கு வழங்கப்பட்ட விபத்து

பதிவேடு நகல் அ.த.சா.ஆ.15 என்றும், அ.சா.2 உதயகுமாரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தபோது அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்ததாகவும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து தெரிவித்து தான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் அ.த.சா.ஆ.16 என்றும், அதன் பின்புறம் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை அ.த.சா.ஆ.17 என்றும், அ.சா.3 அறிவழகனை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததாகவும், அவர் 30.03.2015 அன்று மருத்துவ அறிவுரையை மீறி சென்றுவிட்டதால் அவருக்கு காயத்தின் தன்மை குறித்து சான்றிதழ் அளிக்க இயலவில்லை என்றும், அவருக்கு தான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் அ.த.சா.ஆ.18 என்றும், அவர்களுக்கு தனித்தனியாக விபத்து பதிவேடுகள் பதிவு செய்ததாகவும், சிகிச்சையில் இருந்து சொல்லிக்கொள்ளாமல் வெளியேறிவிட்ட அ.சா.3 ரத்தினம் மற்றும் அ.சா.5 அஜித்குமார் என்பவர்களுக்கு ஏற்பட்ட காயத்தை பொருத்து தன்னால் கருத்துரு வழங்க இயலவில்லை என்றும், மற்ற நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று காயச்சான்று வழங்கியதாகவும், மேற்படி விபத்து

பதிவேடு மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ10 முதல் அ.த.சா.ஆ18 வரை என்றும் சாட்சியம் அளித்திருந்தபோதிலும், இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லும் நிகழ்நிலை புகார்தாரர் மணிவண்ணன், அ.சா.2 உதயகுமார், அ.சா.3 அறிவழகன், அ.சா.4 வேல்முருகன், அ.சா.5அஜித்குமார், அ.சா.6 ஈஸ்வரி ஆகியோர்கள் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்ட காரணத்தினால், மேற்படி மருத்துவரிடம் அவர்களால் தெரிவித்த சங்கதிகள் உண்மையல்ல என்று எதிரிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்ட வாதம் ஏற்புடையதாக உள்ளது.

15. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.13 ஆக விசாரிக்கப்பட்டதில் அவர் கடந்த 29.03.2015 அன்று சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அ.த.சா.பொ.1 வரிசை PVC பைப்புகளை கைப்பற்றியதாகவும், சாட்சியம் அளித்திருந்தபோதிலும், அது தகுந்த தனி நபர் சாட்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை என்ற காரணத்தினால், அது நம்பக்கூடிய வகையில் என்று எதிரிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்ட வாதம் ஏற்புடையதாக உள்ளது. இவ்வழக்கு சம்பவத்தில் ஆனைக்குட்டி என்ற நபர் ஈடுபடவில்லை என்பதால் அவரை நீக்கி

அ.த.சா.ஆ.27 பெயர் நீக்கல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், கைப்பற்றிய தடயத்தை அ.த.சா.ஆ.28 படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், புலன் விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்திருந்தபோதிலும், மேற்படி புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் இவ்வழக்கு குற்றத்தை புரிந்தார்கள் என்று முடிவு செய்ய இயலாது. மேற்படி வழக்கு சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லும் நபர்களே பிறழ்சாட்சிகளாக மாறிவிட்ட காரணத்தினால், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தையும், மருத்துவரின் சாட்சியத்தையும் வைத்துக்கொண்டு எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டிய நபர்கள் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதல்ல.

16. எனவே, அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. இந்த சூழ்நிலையில், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து தீர்ப்பளிப்பதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.



R VELARAS

Digitally signed by R VELARAS
Date: 2025.03.27 17:28:30 +0530

17. முடிவில், 5ம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அற்று போய்விட்டது என்றும், மற்ற எதிரிகளின் மீது பிரிவுகள் 147, 294(b), 323(6 counts), 323 r/w 149 of IPC, பிரிவு 3(1)(x) of SC/ST Act–ன் படிக்கு அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை BNSS 258(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளால் எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சி.பி.எண் 133/2015–ல் ஒப்படைக்கப்பட்டுள்ள வழக்கு சொத்து அ.த.சா.பொ.1 PVC பைப்புகள் 3 எண்ணிக்கை–ஐ மேல்முறையீட்டு காலம் முடிந்த பிறகு அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

R VELARAS

Digitally signed by R VELARAS
Date: 2025.03.27 17:28:37 +0530

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கம்யூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:28:42 +0530

**அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)**
**சிறப்பு மாவட்ட நீதிமன்றம்,**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்**
**வன்கொடுமை தடுப்பு சட்டம், சேலம்.**

**பின் இணைப்பு –**

**அரசு தரப்பு சாட்சியங்கள் –**

| **சாட்சி எண்** | **சாட்சிகளின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | மணிவண்ணன் |
| அ.சா.2 | உதயகுமார் |
| அ.சா.3 | அறிவழகன் |
| அ.சா.4 | வேல்முருகன் |
| அ.சா.5 | அஜித்குமார் |
| அ.சா.6 | ஈஸ்வரி |
| அ.சா.7 | தங்கராஜ் |
| அ.சா.8 | பாலாஜி |
| அ.சா.9 | பெருமாள் |
| அ.சா.10 | நர்மதா |
| அ.சா.11 | சாந்தி |
| அ.சா.12 | மனோன்மணி |
| அ.சா.13 | உதயகுமார் |

**அரசு தரப்புச் சான்றாவணங்கள்–**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும் |
| அ.த.சா.ஆ.2 | புகார் வாக்குமூலத்தில் அறிவேன் என்ற இடத்தில் உள்ள அ.சா.3னின் கையொப்பம் மட்டும். |
| அ.த.சா.ஆ.3 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.7னின் முதல் கையெழுத்து மட்டும் |
| அ.த.சா.ஆ.4 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.7னின் முதல் கையெழுத்து மட்டும் |


R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:28:51 +0530

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.5 | 1ம் எதிரிக்கு அ.சா.8 வழங்கிய ஜாதி சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.6 | 2ம் எதிரிக்கு அ.சா.8 வழங்கிய ஜாதி சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.7 | 3ம் எதிரிக்கு அ.சா.8 வழங்கிய ஜாதி சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.8 | 4ம் எதிரிக்கு அ.சா.8 வழங்கிய ஜாதி சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.9 | 6ம் எதிரிக்கு அ.சா.8 வழங்கிய ஜாதி சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.10 | அ.சா.6க்கு அ.சா.9 வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.11 | அ.சா.4க்கு அ.சா.9 வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.12 | அ.சா.1க்கு அ.சா.9 வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.13 | அ.சா.1ற்கு அ.சா.9 வழங்கிய காயச்சான்று குறிப்பு |
| அ.த.சா.ஆ.14 | அ.சா.6ற்கு அ.சா.9 வழங்கிய காயச்சான்று குறிப்பு |
| அ.த.சா.ஆ.15 | அ.சா.5க்கு அ.சா.9 வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.16 | அ.சா.2க்கு அ.சா.9 வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.17 | அ.சா.2க்கு அ.சா.9 வழங்கிய கருத்துரை |
| அ.த.சா.ஆ.18 | அ.சா.3க்கு அ.சா.9 வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.19 | வாதிக்கு அ.சா.10 வழங்கிய ஜாதி சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.20 வரிசை | அ.சா.2 முதல் அ.சா.6 வரையிலானவர்களுக்கு அ.சா.11 வழங்கிய ஜாதி சான்றிதழ்கள் |
| அ.த.சா.ஆ.21 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.22 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.23 | சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிறப்பித்த உத்தரவு |
| அ.த.சா.ஆ.24 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.25 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.26 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.27 | நீக்கல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.28 | படிவம் 91 |



R VELARAS

Digitally signed by R VELARAS
Date: 2025.03.27 17:28:57 +0530

**<u>அரசு தரப்புச் சான்றுப் பொருள்–</u>**

| | |
|---|---|
| அ.த.சா.பொ.1 | PVC பைப்புகள் 3 எண்ணிக்கை |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள், சான்றுபொருள்கள்</u> – இல்லை**

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2025.03.27 17:29:02 +0530

**அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)**
**சிறப்பு மாவட்ட நீதிமன்றம்,**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்**
**வன்கொடுமை தடுப்பு சட்டம், சேலம்.**

## வழக்கு விவரக் குறிப்பு (Case Summary)

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் | 1) 1, 3 முதல் 6ம் எதிரிகள்– 30.03.2015 – 10.04.2015<br>2) 2ம் எதிரி நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்ற நாள் – 05.06.2015 – 27.07.2015 | |
| 2. | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 25.08.2015 | |
| 3. | எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்டு கு.வி.மு.ச பிரிவு 228 ன் கீழ் குற்றச்சாட்டு வினவப்பட்ட தேதி | 03.07.2017 | |
| 4. | அரசு தரப்பு சாட்சியங்களை முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாட்கள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | அ.சா.1 | 19.09.2023 | – |
| | அ.சா.2 | 19.09.2023 | – |
| | அ.சா.3 | 19.09.2023 | – |
| | அ.சா.4 | 19.09.2023 | – |
| | அ.சா.5 | 10.10.2023 | – |
| | அ.சா.6 | 10.10.2023 | 10.10.2023 |
| | அ.சா.7 | 10.10.2023 | 10.10.2023 |
| | அ.சா.8 | 18.03.2024 | – |
| | அ.சா.9 | 18.03.2024 | 18.03.2024 |
| | அ.சா.10 | 21.01.2025 | – |



R VELARAS

Digitally signed by R VELARAS
Date: 2025.03.27 17:29:11 +0530

| | | | |
|---|---|---|---|
| | அ.சா.11 | 21.01.2025 | – |
| | அ.சா.12 | 18.03.2025 | 18.03.2025 |
| | அ.சா.13 | 18.03.2025 | 18.03.2025 |
| 5. | எதிரிகள் BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழ் வினவப்பட்ட தேதி | 24.03.2025 | |
| 6. | எதிரிகள் தலைமறைவாகி நீதிமன்றத்தில் சரண்டரான/ஆஜர்படுத்தப்பட்ட தேதி | 4 மற்றும் 6ம் எதிரிகள் – 14.06.2018/21.06.2018<br>1ம் எதிரி – 27.10.2021/10.12.2021<br>4ம் எதிரி – 14.12.2022/05.08.2023<br>4ம் எதிரி – 23.07.2024/03.11.2024 | |
| 7. | மேல் நீதிமன்றத்தின் தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு | – | |

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2025.03.27 17:29:18 +0530

**அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)**
**சிறப்பு மாவட்ட நீதிமன்றம்,**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்**
**வன்கொடுமை தடுப்பு சட்டம், சேலம்.**